**தணிப்பு நடவடிக்கைகள் மூலம் நிலப் பாதிப்பை குறைத்தல் செயற்திட்டம் - 2022**

---

தணிப்பு நடவடிக்கைகள் மூலம் நிலப் பாதிப்பை குறைத்தல் செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 ஏப்ரல் 25 ஆம் திகதிய எல் 0124 ஏ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் II ஆ (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் பாதுகாப்பு அமைச்சு - அனர்த்த முகாமைத்துவ பிரிவு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. பௌதீக ரீதியான தணிப்பு நடவடிக்கைகளை அமுல்படுத்துவதன் மூலம் மண்சரிவுகளால் ஏற்படும் இடர் மற்றும் சேதத்தை குறைத்து மண்சரிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் பிரமாணங்களை மேம்படுத்துதல் இச் செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 18,396.08 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 101.3 மில்லியனானதுடன் அதில் ரூபா 14,528 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 80 மில்லியன் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 யூலை 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செலவினக் கூற்றையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2019 மார்ச் 15 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்குழுக் கூட்டம் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டின் போது ஒரு கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. | பல்வேறு காரணங்களினால் சுற்றறிக்கையின் பிரகாரம் வழிகாட்டல் குழு கூட்டத்தை நடாத்துவதற்கு செயற்திட்டம் தவறியிருந்தது. | சுற்றறிக்கையில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்ற வேண்டும். |
| (ஆ) | கடன் உடன்படிக்கை இலக்கம் எல் 0124 ஏ | கடன் உடன்படிக்கையில் 84 சதவீதத்திற்கு பதிலாக 86 சதவீதம் மீளளிப்பு செய்யப்பட்டதன் காரணமாக செயற்திட்டத்தின் ஏ பிரிவின் செலவினத் தொகுதி I இன் கீழ் 2020 யூலை 01 ஆம் திகதி முதல் 2022 மார்ச் 31 வரை மேற்கொள்ளப்பட்ட சிவில் நிர்மாண வேலைச் செலவினத்திற்கான அ.டொலர் 96,229 வங்கியினால் 2022 திசெம்பர் 31 இல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | செயற்திட்ட ஆவணங்களின் உப தொகுதிகளில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் சிவில் வேலைகளுக்காக செய்யப்பட்ட செலவினத்திற்காக 86 சதவீதம் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியில் இருந்து (AIIB) நிதியீட்டம் செய்யப்பட்டிருந்ததுடன், செயற்திட்டத்தின் ஆரம்பம் முதல் வங்கியினால் பீஎம்யூ இனால் ஒப்பந்தகாரருக்கு ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் நிதியம் ஊடாக அவ்வாறு அந்த சதவீதம் செலுத்தப்பட்டிருந்தது. ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியில் இருந்தும் பீஎம்யூ இற்கு இவ்வாறு செலுத்தும் நடைமுறை முன்கொண்டு செல்லுமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்ததுடன், கடன் உடன்படிக்கையை திருத்தியதன் பின்னர் நிறுத்தி வைத்தல் பணத்தை விடுவிப்பதற்கு இணங்கப்பட்டிருந்தது. மேலும் ஈஆர்டீ ஆலோசனையின் | மேலதிக செலுத்துதல்களை மீள அறவிடுவதற்கு வங்கியின் விருப்பம் பெறப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பிரகாரம் அமைச்சரவை பத்திரம் ஒன்று பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பீஎம்யூ இனால் தயாரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | |
| (இ) | அமைச்சரவை பத்திர இலக்கம். 22/1362/604/028 | சுகாதார அமைச்சிற்கு அத்தியாவசியமான மருந்துகள் மற்றும் மருத்துவ வழங்கல்களை கொள்வனவு செய்வதற்கு நிதியினை ஒதுக்குவதற்கு 2022 செப்டம்பர் 12 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரம் கிடைப்பதற்கு முன் அதாவது 2022 யூலை 18 ஆந் திகதி கடன் உடன்படிக்கையில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்திற்காக இலங்கை அரசாங்கத்திற்கும் வங்கிக்கும் இடையில் உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருந்தது. | நாட்டிலுள்ள தற்போதைய பொருளாதார நிலைமைக்குத் தீர்வாக அரசாங்கத்திற்கும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கிக்கும் இடையில் உரிய தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. | கடன் உடன்படிக்கையை திருத்துவதற்கு முன் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

## 2.2 மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்பான விடயங்கள்

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவத்தின் பதில்கள்** | **கணக்காய்வளரின் பரிந்துரைகள்** |
|---|---|---|
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி மற்றும் ஆட்சேர்த்தல் கடிதம் அல்லது நியமனக் கடிதம் இன்றி அலுவலக உதவியாளர் பதவிக்கு நாளாந்த அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் சேர்க்கப்பட்டிருந்தார். | அலுவல உதவியாளர் பதவிக்கு ஒரு உத்தியோகத்தர் நாளாந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தார். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |